# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1823/42 - 2013 අගෝස්තු මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.15

*1823/42 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல : சிஎஸ்ஏ/7/8/15.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**
**அதியுத்தமராம் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்த சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்த 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியில் தொடங்கி சொல்லப்பட்ட போர் முடிவடைந்ததாக குறிப்பீடு செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டின் மே மாதம் 19 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் துரதிர்ஷ்டவசமான சம்பவங்களுக்கு ஆளான இலங்கையின் வட மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் வசித்துவந்த ஆட்கள் சிலர் அவர்கள் வசித்துவந்த இடங்களிலிருந்து தம்மிச்சைக்கு மாறாக எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது அவ்வாறான ஆட்கள், அவர்கள் வசித்துவந்த இடங்களிலிருந்து காணாமல் போயுள்ளதாகவோ, அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமல் போனதாகவோ கூறப்படும் ஆட்கள் எங்கிருக்கிறார்கள் என்பது அறியப்படவில்லை என்றும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாதலாலும்,

அத்துடன், மேற்போந்த முறைப்பாடுகளின் உண்மை நிலையையும் பொய்யையும் ஐயமற அறிந்துகொள்வதற்கும், சொல்லப்பட்ட முறைப்பாடுகள் உண்மையானவையெனில், அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமல்போனதாகக் கூறப்படும் ஆட்கள் யாவர் என்பதை அடையாளங்காண்பதற்கும் அவசியமாகியிருக்கின்றதாதலாலும்,

அத்துடன், சொல்லப்பட்ட எடுத்துச் செல்லல்கள் அல்லது காணாமல் போதல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய ஆள் அல்லது ஆட்கள் யார் என்பதை அடையாளங்கண்டு அது தொடர்பாக சொல்லப்பட்ட ஆள் அல்லது ஆட்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அவசியமாகியிருக்கின்றதாதலாலும்,

அத்துடன், அவ்வாறான செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு விசாரணைகளை மேற்கொள்வது பொதுமக்களின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் காரணமாக அமையக்கூடுமென்பது எனது அபிப்பிராயமாக இருக்கின்றதாதலாலும் ,



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

எக்கருமங்கள் தொடர்பில் விசாரணையொன்று எனது அபிப்பிராயப்படி பொதுமக்களின் நலனுக்கானதாக இருக்கின்றதோ, அக்கருமங்களாகவுள்ள இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் கருமங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கையிடும் நோக்கத்திற்காக விசாரணை ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பது அவசியமானதென எனக்குத் தோன்றுகின்றதாதலாலும்,

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, தற்சார்பு, நேர்மை என்பன மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி சொல்லப்பட்ட,

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்த சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகிய உங்களை, பின்வரும் கருமங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கு எனது ஆணையாளர்களாக இருக்கவென இத்தால் நியமிக்கின்றேன் :-

(அ) 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியில் தொடங்கி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வரையில் வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் வசித்துவந்த ஆளெவரும் தம்மிச்சைக்கு மாறாக தமது வசிப்பிடங்களை விட்டும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்களா, அல்லது காணாமல் போயுள்ளார்களா ;

(ஆ) அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமல் போனதாக நிரூபிக்கப்போதுமான சான்றுகள் ;

(இ) அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட அல்லது காணாமல்போன ஆட்கள் யார், அத்துடன் சொல்லப்பட்ட ஆட்கள் தற்போது இருக்கின்ற இடங்கள் ;

(ஈ) மேற்சொன்ன எடுத்துச் செல்லல்கள் அல்லது காணாமல் போதல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆள் அல்லது ஆட்கள் குறித்த ஒரு கருத்தோட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளத் துணிந்த நம்பத்தகுந்த காரணிகள் அல்லது சான்றுகள் ;

(உ) அவ்வாறு பொறுப்புக்கூறவேண்டுமெனத் தீர்மானிக்கப்படும் ஆள் அல்லது ஆட்களுக்கெதிராக எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள் ;

(ஊ) அவ்வாறான செயல்கள் எதில்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் ;

(எ) அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாக அல்லது காணாமல்போனதாகக் குறிப்பிடப்படும் ஆட்களின் பெற்றோருக்கு, வாழ்க்கைத்துணைக்கு, தங்கி வாழ்வோருக்கு அரசாங்கத்தின் ஒரு பொறுப்பென்ற வகையில் அளிக்கப்படவேண்டிய நிவாரணங்கள் எவையுமிருப்பின், அத்தகைய நிவாரணங்கள் ;

அத்துடன், மேலே சொல்லப்பட்ட மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம ஆகிய உங்களை, சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக இருக்கவென நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட ஆணையாளர்களான உங்களுக்கு மேற்போந்த கருமங்களைப் பற்றி அவசியமானதெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்துவதற்கும், அத்தகைய வேறு எல்லாப் புலனாய்வுகளைச் செய்வதற்கும் அதிகாரமளித்துத் தத்துவமும் வழங்குகின்றேன். அத்துடன், இதனுடன் சம்பந்தப்பட்ட உங்கள் விசாரணைகளின் காண்புகளையும் உங்கள் விதப்புரைகளையும் தருகின்ற அதன் மீதான அறிக்கையை தங்கள் கைப்பட இதனகத்துக் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து ஆறு (6) மாத காலத்துள் எனக்கு அனுப்பிவைக்குமாறு உங்களை இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட கருமங்கள் தொடர்பாக பகிரங்கமாக நடாத்தப்படக் கூடாதென உங்கள் தற்றுணிபின் பேரில் நீங்கள் தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் விசாரணையில் அத்தகைய பாகம் அவ்வாறு நடாத்தப்படல் ஆகாது என இத்தால் நான் பணிக்கின்றேன்.

அத்துடன், உங்கள் விசாரணைகளின் அல்லது புலனாய்வுகளின் நோக்கத்திற்காக எந்தப் பகிரங்க அலுவலரிடமும் வேறெந்த ஆள்களிடமும் நீங்கள் உதவி அல்லது தகவல் கோருகின்றீர்களோ, அந்தப் பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்கள் அனைவரையும் அதன் சார்பில் முறையாக அளிக்கப்படக்கூடியனவும் கொடுத்து உதவப்படக்கூடியனவுமான அத்தகைய எல்லா உதவிகளையும் அளிக்குமாறும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுமாறும் இத்தால் நான் தேவைப்படுத்திப் பணிக்கின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்துபதின் மூன்றாம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆம் நாளன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

8-1021

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.